நாடார் பிரஸ்
குடந்தை.94437 27594

உ
சிவமயம்

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், சைதன்யபுரம்
எனும் சேதனிபுரம் கிராமத்தில் அருள்பாலித்து வரும்

அருள்மிகு **மீனாக்ஷி அம்பிகா ஸமேத**
சுந்தரேஸ்வர ஸ்வாமி ஏனைய பரிவார ஆலயங்கள்
ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன ரஜதபந்தன

மஹா கும்பாபிஷேகப் பத்திரிக்கை

நாள் : ஆனி 14 ஆம் தேதி **(29.06.2023)** வியாழக்கிழமை

திருவாரூர் மாவட்டம்,குடவாசல் வட்டம்
சைதன்யபுரம் எனும் சேதனிபுரம் கிராமத்தில் அருள்பாலித்து வரும்
அருள்மிகு **மீனாக்ஷி அம்பிகா ஸமேத**
சுந்தரேஸ்வர ஸ்வாமி ஏனைய பரிவார ஆலயங்கள்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன ரஜதபந்தன

மஹா கும்பாபிஷேகப் பத்திரிக்கை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.!!

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே!!

சிவனேயச் செல்வர்களே!

சேதனிபுரம் என்கிற இவ்வழகிய கிராமம் நாச்சியார்கோயில், ஸ்ரீவாஞ்சியம் மற்றும் திருவீழிமழலை க்ஷேத்ரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது. இக்கிராமம் வேதமும் நாமசங்கீர்த்தனமும் தழைத்து ஓங்கிய கிராமம்.

ஸ்ரீ விநாயகர், சிவன், பெருமாள் மற்றும் கிராம தேவதைகள் ஆலயங்கள் அமைந்துள்ள ஊர். **ஸ்ரீ சைதன்ய மஹா பிரபு** இந்த கிராமத்தில் சில நாட்கள் தங்கி நாம பிரச்சாரம் செய்ததால் இக்கிராமம் சைதன்யபுரம் என்று அழைக்கப்பட்டது. **ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவா, ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண பிரேமி ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீ சின்னான் ஸ்வாமிகள்** விஜயம் செய்து அருளாசிகள் வழங்கிய ஊர். ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் பரிவார தேவதைகளுடன் இக்கிராமத்தின் கிழக்கு திசையில் அமைந்து அருளாட்சி புரிந்து வருகின்றார். இத்தலம் சிறந்த **'மனோகாரக'** ஸ்தலம் ஆகும் ('Manokaraka' also means ruler of mind) இந்த தலத்தில் உள்ள சிவனையும், அம்பிகையும் வழிபட அனைத்து மனோவ்யாதி, பயம் மற்றும் மனம் சம்பந்தப்பட்ட நோய்கள் நீங்கும். இச்சிறப்புகளை உடைய **ஸ்ரீ மீனாக்ஷி அம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வர ஸ்வாமி** மற்றும் ஏனைய பரிவார ஆலயங்களில் சிதிலமடைந்த பகுதிகள் புதுப்பிக்க பெற்று வர்ண கலாபங்கள் செய்விக்கப் பெற்று **மஹா கும்பாபிஷேகம்** நாளது நிகழும் சோபக்ருது வருடம் ஆனி மாதம் 14 ஆம் தேதி (29.06.2023) வியாழக்கிழமை சுக்லபக்ஷ ஏகாதசி திதியும்,சுவாதி நட்சத்திரமும், சித்தி நாம யோகமும், வணிஜை கரணமும் அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.00 மணிக்குமேல் 10.30 க்குள் சிம்மலக்னத்தில் ஆகம விதிப்படி பஞ்ச குண்ட விதானமாக **பரமபூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ முரளிதர குருஜி** (மஹாரண்யம் - மதுராபுரி ஆஸ்ரமம்) அருளாசியுடன் நடைபெறும். ஆதலால் பக்தகோடிகள் யாவரும் கலந்து கொண்டு இறையருள் பெற வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
சைதன்யபுர ஆஸ்திக சமாஜ், சேதனிபுரம்

நிகழ்ச்சி நிரல்:

தமிழ்தேதி		ஆங்கில தேதி	கிழமை	நேரம்	நிகழ்ச்சி விபரம்
நிகழும் சோபக்ருது வருடம் ஆனி மாதம்	12	27.06.2023	செவ்வாய்	காலை 8.00 மணி முதல்	அனுக்ஞை,விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாசனம் மஹாகணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், கிராம சாந்தி
				காலை 11.00 மணி	மஹா பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்
				மாலை 05.00 மணி	வாஸ்து சாந்தி, மிருத்சங் கிரகணம், அங்குரார்பணம், ஆச்சார்ய ரக்ஷா பந்தனம், கும்பா அலங்காரம், கலாகர்ஷணம், யாகசாலை பிரவேசம், முதற்கால யாக பூஜை ஹோமங்கள், திரவ்யாஹுதி,
				இரவு 08.30 மணி	மஹா பூர்ணாஹுதி, சதுர்வேத, ஆகம திருமுறைகள் பாராயணம், ராக-தாள உபசாரங்கள்.
				இரவு 09.30 மணி	மஹா தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் - **காலம் 1**
	13	28.06.2023	**புதன்**	காலை 09.00 மணி	விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாசனம், விசேஷ சந்தி, இரண்டாம் கால பூஜை - ஹோமம் தொடக்கம்.
				காலை 10.30 மணி	அனைத்து விமான கலச ஸ்தாபனம், அனைத்து மூர்த்திக்கும் யந்திர ஸ்தாபனம்.
				நண்பகல் 12.00 மணி	மஹா பூர்ணாஹுதி, சதுர்வேத, ஆகம திருமுறைகள் பாராயணம், ராக-தாள உபசாரங்கள்.
				நண்பகல் 01.00 மணி	மஹா தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் - **காலம் 2**
				மாலை 05.00 மணி	விஷேச சந்தி, மூன்றாம் கால யாக பூஜை ஹோமங்கள் தொடக்கம், அஷ்டபந்தன மருந்து சாற்றுதல்.
				இரவு 07.00 மணி	கோமாதா பூஜை, அஸ்வ பூஜை, கஜ பூஜை, லட்சுமி பூஜை, சுமங்கலி பூஜை.
				இரவு 08.30 மணி	திரவ்யாஹுதி, மஹா பூர்ணாஹுதி, சதுர்வேத, ஆகம திருமுறைகள், பாராயணம், ராக-தாள உபசாரங்கள்.
				இரவு 09.30 மணி	மஹா தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் - **காலம் 3**
	14	29.06.2023	**வியாழன்**	காலை 07.35 மணி	நான்காம் கால யாக பூஜை ஹோமங்கள் தொடக்கம் பிம்ப சுத்தி, சுவாமி ரக்ஷாபந்தனம் ஸ்பர்சாஹுதி, திரவ்யாஹுதி.
				காலை 09.30 - 10.00	மஹா பூர்ணாஹுதி, சதுர்வேத, ஆகம திருமுறைகள், பாராயணம், ராக-தாள உபசாரங்கள். மஹா தீபாராதனை - **காலம் 4,** யாத்ராதானம், கலசம் புறப்பாடு
				காலை 10.30 மணி	**விமான கும்பாபிஷேகம்**
				காலை 11.00 மணி	**ஸ்ரீ மீனாக்ஷி சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரர்** கும்பாபிஷேகம், தீபாராதனை & யஜமானர் மரியாதை.

ஆலய அர்ச்சகர் :
ஸ்ரீ ஜெயராமன்
சேதனிபுரம்.

www.sethanipuram.com

சர்வ சாதகம் :
"சிவாகம ரத்னம்" "ஜோதிட கலா சாம்ராட்"
மேல்மருத்துவகுடி.
கீ. ஆடூர். சிவஞான சம்பந்த
சிவாச்சாரியார்